அமர்வு வழக்கு எண் : 91/2018
அ.சா. :1
பெயர் :அப்துல் கபூர்
நாள் : 18.07.2025

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஹாஜிமுகமது எனக்கு உறவினர் இல்லை சுமார் 30-40 வருடங்களாக தெரியும். நாங்கள் அனைவரும் ஒரே ஜமாத்தை சேர்ந்தவர்கள். ஹபீப்ஜானுக்கும், ஹாஜ்முகமதுக்கும் சொத்து சம்பந்தமாக இடப்பிரச்சனை 20 ஆண்டு காலமாக உள்ளது இருவரும் அடிக்கடி சண்டை போட்டுக்கொள்வார்கள். நீதிமன்ற வழக்குள் உண்டு என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் ஒரு தேதி சொல்லியுள்ளேன் அது 08.06.2010. அன்றைய தினம் காவல் துறையினர் ஹாஜ்முகமதை இடப்பிரச்சனை சம்பந்தமான புகாரின்பேரில் அழைத்து சென்றார்கள். நான் முதல் விசாரணையில் ஊர்காரர்கள் 4, 5 பேர் காவல்நிலையம் போனதாக சொல்லியுள்ளேன் ஆனால் அவர்கள் பெயர் சொல்லவில்லை. முதல் விசாரணயைில் யார் வீட்டையும் யாரும் இடித்ததாக நான் சொல்லவில்லை. அப்படி சொல்லியிருந்தால் அது தவறு. எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் மணல்மேடு காவல் நிலையத்திற்கு நான் செல்லவில்லை என்றும், ஹஜ்முகமது எனக்கு 35, 40 ஆண்டுகளாக தெரியும் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/7/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை